Registered as a NewsPaper    பக்கங்கள் 04    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE ELEANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    சித்திரை 08    ( 20 - 04 - 1992 )    திங்கட்கிழமை    ஓசை: 62

## 3 மாதங்களில் 1626 பேர் நாய்க்கடிக்குள்ளாகினர்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த மூன்று மாதங்களில் நாய்க்கடிக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1626 எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பத்துப் பேர் மரணமடைந்துள்ளார்கள். மேற்படி இரண்டு மாவட்டங்களிலும் கடந்த வருடம் பதினைந்துபேர் நாய்க்கடியினால் மரணமானார்கள் என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைப் பதிவுகளின்படி ஜனவரியில் 249 பேர் நாய்க்கடிக்குச் சிகிச்சை பெற்றார்கள் என்றும், இவர்களில் 22 பேர் விசர்நாய்க்கடிக்குச் சிகிச்சை பெற்றார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பெப்ரவரி மாதத்தில் நாய்க்கடிக்குச் சிகிச்சை பெற்ற 225 பேரில் 55 பேர் விசர்நாய்க்கடிக்கு சிகிச்சை (4ஆம் பக்கம் பார்க்க)

# பிக்குகளின் நல்லெண்ண குழு புதன்கிழமை யாழ். வரலாம்

## செஞ்சிலுவை புலிகள் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு நல்லெண்ண விஜயத்தை மேற்கொள்ளவுள்ள பௌத்த பிக்குகளின் தூதுக்குழு புதன்கிழமை யாழ். வரலாம் எனத் தெரிய வருகிறது. நேற்று விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது, பிக்குகள் யாழ். வருவதற்கான அனுமதி புலிகளால் வழங்கப்பட்டது. அத்தோடு, பிக்குகளின் பாதுகாப்பு, தங்குமிட வசதிகள் குறித்தும் நேற்றைய பேச்சுவார்த்தையின் போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிகிறது.

இதே வேளை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம்வரவிருந்த பத்து பௌத்த மத குருமாரும் தமது விஜயத்தைஒத்திப்போட்டிருப்பதாக கொழும்பில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அவர்கள் கொழும்பிலிருந்து புறப்படவிருந்த போதிலும் பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டது.

இக் குழுவின் தலைவரான வண. பலப்பிட்டிய சித்தார்த்த மகா நாயக்க தேரோ பயணத்தைப் பின் போட்டதற்கான காரணம் எதையும் கூறவில்லை.

யாழ்ப்பாண விஜயத்தில் மாற்றமில்லை என்றும், இன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்விற்கான பல திட்டங்கள் நல்லெண்ண குழுவிடம் உண்டாம்

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் இனவாதிகள் அல்ல என்பதை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தல் எமது விஜயத்தின் நோக்கங்களில் ஒன்று. வடக்கிலும், கிழக்கிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துக்களை அறிந்த பின்னர்தான் நாம் அவற்றை அரசுக்கு தெரியப்படுத்த முடியும். அதனால் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று ஏற்படலாம். இவ்வாறு தூதுக் குழுவில் ஒருவரான வண. போராடுகிறதா என்ற கேள்விக்கு வண. தேரோ பதிலளிக்கையில், யாருக்கு எதிராகப் போராடுவது என்பதைத் தீர்மானிப்பது அரசு. ஆனால், (4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காலை தாக்குதலில் 11 படை பலியென அறிவுப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டம் தள்ளாடி முகாமிலிருந்து புறப்பட்டசிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட 11சிறிலங்கா படையினர் பலியாகியதாகசிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 11 நவீனரக துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை இத் தாக்குதலில் ஆறு இராணுவத்தினர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலுள்ள நெடுங்கேணி... நெடுபுளியங்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## மேதின எழுச்சி நாள் செயற்பாட்டுக் குழு அமைப்பு

பல்வேறு தனியார் கூட்டுறவு மற்றும் திணைக்களங்கள் சார்ந்த தொழிற்சங்கங்களினதும், வர்த்தக சங்கங்களினதும் மேநாள் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடல், தமிழீழ விடுதலைப் புலிகளது யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் தமிழீழ அரசியற் பொறுப்பாளர், மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ஆகியோர் (4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

### மேஜர் வளர்மதி

மேஜர் வளர்மதி (சாந்தி செல்லத்துரை, நாகதம்பிரான் வீதி- கண்ணகிபுரம் வாழைச்சேனை) (4 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் மீனவர்கள் மீது இராணுவம் தாக்கு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூரில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஐந்து தமிழ் மீனவர்கள் சிறிலங்கா இராணுவத்தால் தாக்கப்பட்ட பின்னர் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொது வேலை நிறுத்தம்; தொழிற் சங்கங்கள் ஏற்பாடு

(கொழும்பு)

நாடு தழுவிய அளவில் பொது வேலை நிறுத்தம் ஒன்றை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. என்று தொழிற் சங்க கூட்டுக்கமிட்டியின் செயலாளர் அலவி மௌலானா கூறியுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கைகளைப் பாதிக்கும் அவசரகால சட்ட விதிகளை விலக்கக் கோரியும், அரசாங்க நிறுவனங்கள் முதலாளிகளுக்குத் தாரை வார்க்கப் படுவதைக் கண்டித்தும், இந்த வேலை நிறுத்தம் ஏற்பாடு செய்யப்படுவதாக அலவி மௌலானா தெரிவித்தார்.

இவ்வாறு வேலை நிறுத்த முஸ்தீபுக்களில் இறங்கியிருக்கும் தொழிற்சங்கக் கூட்டுக் கமிட்டியில், சுதந்திரக் கட்சி தொழிற்சங்கம், மகாஜன எக்ஷத் பெரமுண, லங்கா சமசமாஜக் கட்சி சிறிலங்கா கம்யூனிஸ்ட்கட்சி, நவசமசமாஜக் கட்சி, சிறிலங்கா மகாஜன பக்ஷய, என்பன உட்பட இருபத்தொன்பது தொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

ஏப்ரல் 29 ஆம் திகதி நடைபெறும் ஒரு நாள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து கொம்பனித் தெரு டீமெல் பூங்காவில் பொதுக்கூட்டமும் இடம்பெறும். பின்னர் இவை மாகாண மட்டங்களுக்கு விரிவாக்கப்படும் என்று அலவி மௌலானா மேலும் கூறியுள்ளார்.

## வவுனியாவில் புலிகள் தாக்கு ஒரு இராணுவம் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டம்புளியங்குளம் பகுதியில் உள்ள காவலரணிலிருந்து வெளியேறி விடுதலைப் புலிகளின் காவலரண் பகுதியை நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதல் காவலரணிலிருந்து 150 யார் தூரத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது இந்த தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். அவரிடமிருந்து ரி - 56 ரக துப் (4 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

### லெப்டினன்ட் நரேன்

வாதிகள் அல்ல என்பதை தமிழ் மக்களுக்கு தெளிவு படுத்தல் எமது விஜயத்தின் நோக்கங்களில் ஒன்று. வடக்கி லும், கிழக்கிலும் யுத்தத்தி

பின்னர்தான் நாம் அவற்றை அரசுக்கு தெரியப்படுத்த முடியும். அதனால் இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்று ஏற்படலாம். இவ்வாறு தூதுக் குழுவில் ஒருவரான வண. பலப்பிட்டிய லாட்பாண சிறி மகாநாயக்க தேரோ பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் நேற்றுத் தெரிவித்தார்.

எம்மிடம் பல தீர்மானங்கள் உள்ளன. தீர்மானங்கள் எமது குழுவின் அனுமதியின்றி வெளியிட முடியாது. பாதிக்கப் பட்டவர்கள் எம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்கள்? பாதிப்புக்குள்ளான தமிழ் மக்களுக்கு தேவைப்படும் உதவிகளை அறிந்துதான் எம்மால் உதவ முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அரசு தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடுகிறதா, தமிழ் மக்களுக்கு எதிராகப் போராடுகிறதா, யாருக்கு எதிராகப் போராடுவது என்பதைத் தீர்மானிப்பது அரசு. ஆனால்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

லரண் பகுதியை நோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். அவரிடமிருந்து ரி - 56 ரக துப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கமிட்டியில், சுதந்திரக் கட்சி தொழிற்சங்கம், மகாஜன எக்ஷத் பெரமுன, லங்கா சமசமாஜக் கட்சி சிறிலங்கா

## வீரச்சாவு
## கப்டன் காசிம்



மன்னார் மாவட்டம் தள்ளாடி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினர்வெளியேறி வந்தபோது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப் பட்ட துணிகரத் தாக்குதலில் வீரச்சாவை தழுவிக் கொண்ட கப்டன் காசிம் (சபரியூட் ரெட்ணபால, பனங்கட்டி கொட்டு மன்னார்.)

# வடபகுதி எங்கும் அன்னை பூபதிக்கு மக்கள் பெருமளவில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தியாகி அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நிறைவு நினைவு நாட்கள் கடந்த முப்பது நாட்களாக உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. இறுதிநாளான நேற்றைய தினம் வடபகுதியின் பல்வேறு பகுதிகளிலும் அடையாள உண்ணாவிரதங்களும் நினைவு அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன. அனைத்துப் பகுதிகளிலும் நடைபெற்ற அடையாள உண்ணாவிரதம் மற்றும் அஞ்சலி நிகழ்ச்சிகளிலும் வயது வேறுபாடின்றி அனைத்துத் தரப்பினரும் பங்கு கொண்டனர். ஒவ்வொருபகுதிகளிலும் நூற்றுக்கணக்கில் திரண்டிருந்த மக்கள் கூட்டம் தியாகி அன்னை பூபதியை உணர்வு பூர்வமாக நினைவு கூர்ந்தனர்.

வலிகாமம் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தொடர்பகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட அடையாள உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது. தொடர்பகப் பொறுப்பாளர் திரு. அருணகிரி இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

வடமராட்சிப் பிரிவில் தமிழீழ கடற்புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட உண்ணா விரதமும் அஞ்சலிக் கூட்டமும் வல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு
## லெப்டினன்ட் நரேன்



மன்னார் மாவட்டம் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட துணிகரத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'கறுப்பு பூனைகள்' எங்கே?
# விசாரணையில் தெரியவரும் என்கிறார் பிரேமதாசா

(கொழும்பு)

கறுப்புப் பூனைகள் யாருடைய மார்புக்குள் ஒளிந்து கொண்டுள்ளனர் என்பது விசாரணைகள் தொடரும் போது தெரிய வரும் என்று புளத் சிங்களவில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

கறுப்புப் பூனைகள் எங்கே ஒளிந்து கொண்டுள்ளனர் என்பதை மக்கள் விரைவில் அறிந்து கொள்வர் என்றும் அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.

# நினைவஞ்சலி கூட்டத்தில் விமானக் குண்டுவீச்சு
## எட்டுப் பேர் காயம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப் படையினரது குண்டு வீச்சு மற்றும் மிரட்டல்களுக்கும் மத்தியிலும் நேற்று யாழ். நகரில் தியாகி அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

இரண்டாவது நாளாக நேற்றும் யாழ். நகரின் வான் பிராந்தியத்தில் சிறிலங்கா விமானப் படையினரது இரு குண்டு வீச்சு விமானங்கள் வட்டமிட்டுப் பறந்தன. தியாகி அன்னை பூபதியின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற இருந்த யாழ் இந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஹில்மன் கார்கள் குறித்து அவதானமாய் இருக்கவும்
## - கொழும்பு வாசிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

''ஹில்மன் மின்க்ஸ் கார்கள்- வெள்ளை டொயோட்டோ கோஸ்டர் ரக பஸ்களைக் கண்டால் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளுங்கள். நீங்கள் காணும் கார் அல்லது பஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உலகில் எங்குமில்லா அளவு அதிகாரம்கொண்ட ஜனாதிபதி
## —சந்திரிகா குமாரணதுங்க

(கொழும்பு)

''வேறு எந்த நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதிக்குமில்லாத அளவு அதிகாரங்கள் இலங்கை ஜனாதிபதியின் கையில் குவிந்து கிடப்பதால் மக்களின் ஜனநாயக உரிமைகள் பாதிக்கப்படுகின்றன'' என்று திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

இந்த முறையினை மாற்றியமைக்க வேண்டும் என்று வலியுறுத்திய சந்திரிகா மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியையோ அல்லது பிரதமரையோ பாராளுமன்றத்திற்குப் பதில் கூறக் கடமைப்பட்டோர் ஆக்குவதே நாம் கொண்டுவர விரும்பும் முறையாகும்.

குறுகிய காலத்தில் அரசியல் அமைப்பில் பதினைந்து திருத்தங்களுக்கும்மேலாக கொண்டு வந்து இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை உண்மையிலேயே ஒரு கேலிக் கூத்தான விஷயமாகி விட்டது.

பாதயாத்திரை உண்மையில் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் அதிருப்தியை வெளிக்காட்டுவதற்கான வாய்ப்பினை அளித்து விட்டது. பாதயாத்திரை கணிசமான வெற்றி. ஆனால் போதிய அளவு ஏற்பாடுகள் சரியாக நடத்தப் படவில்லை. இதைவிட நன்கு ஏற்பாடு செய்திருக்கலாம் என்றும் அவர் தனதுரையில் குறிப்பிட்டார்.

# புலிகளை தடைசெய்வது அரசியல் தீர்வை தடுக்காது
## --சிறிமா

இந்திய அரசினால் விடுதலைப்புலிகளுக்குத் தடைவிதிக்கப்படுமென்றால் அதனால் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண்பது தடைப்படாது.

இவ்வாறு விடுதலைப் புலிகளை இந்தியாவில் தடைசெய்யும் தீர்மானம் திருப்பதி காமிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப் பட்டது தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

# ஹமில்டனின் நடவடிக்கை ஹேமாவுக்கு ஆச்சரியம்

(கொழும்பு)

போரிடும் துருப்புக்களுக்கு மன மகிழ்ச்சியை ஊட்டுவதற்காக திரைப்படத் தாரகைகள் உட்பட பாடகர் குழுவொன்றை கூட்டுப்படைத் தலைமையக தளபதி ஹமில்டன் வணசிங்க அனுப்பிவைத்தார். புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டமை கண்டுதான் ஆச்சரியப் பட்டதாக திருமதி ஹேமா பிரேமதாசா கூறியுள்ளார்.

23-04 92 காலை 9.00 மணி

தாவரவியல்


ஐங்கரநேசனி

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்

(சி/4293)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
14-3-1965
இறப்பு
20-4-1990

### திருமதி மெற்றில்டா மாலினி கிறிஸ்துராசா

ஆண்டுகள் இரண்டு சென்ற போதும்
ஆறவில்லை உன் இழப்பின் துயர்
இவ்வுலகில் நாமிருக்கும் வரை
இனியவளே உனை மறவோம்
''உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசங் கொள்பவன் இறப்பினும்
வாழ்வான்'' என்றுரைத்த இனியநல் யேசுவே
உம் அடியாள் இவளுக்கு நித்திய வாழ்வில்
பங்களித்தருள வேண்டுகின்றோம்.

பிரிவால் துயரும்.
கணவன், தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர், மைத்துனர்கள்.

ஆசீர்வாதம் வீதி,
மாதகல்.

(சி/4295)

## நினைவஞ்சலி





# A/L 94

கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புகள்

ஆரம்பம்: 23.04.92
காலை 9.00 மணி

★ முன்கூட்டியே அனுமதிகளைப்
பெற்றுக் கொள்ளவும்.


## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/4292)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
15
—
05
—
1930



உதிர்வு
22
—
03
—
1992

### சின்னையா கிருஷ்ணபிள்ளை

நேச மிகு கணவனாய்
பாச மிகு தந்தையாய்
பண்பு மிகு மாமனாய்
அன்பு மிகு பேரனாய்
நண்பர்க்கு இனியவனாய்

வாழ்ந்து மறைந்த திரு. சின்னையா கிருஷ்ணபிள்ளை அவர்கள் புல்மோட்டை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றி இளைப்பாறியவரின் அந்தியேட்டிக் கிரியைகள் துன்னாலை தெற்கு குலானை இல்லத்தில் நாளை 1992-04-21 ஆந் திகதி நடைபெறவுள்ளதால் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குபற்றி, அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி; சி. மகேஸ்வரி
மக்கள்: திருமதி ச. லீலாமலர் (லண்டன்)
திருமதி ஆ. திவ்வியமலர் (ஜெர்மனி)

## அரியாலையில் அன்னை பூபதி நிகழ்வுகள்

அன்னை பூபதியின் நான்காவது ஆண்டுநினைவுதினநிகழ்ச்சிகள் கடந்தவெள்ளிக்கிழமை நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

காலை முதல் இடம்பெற்ற அடையாள உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. இப்பொதுக்கூட்டத்தில் அரியாலை பிரதேச உதவிப் பொறுப்பாளர், வட்டவைத் தலைவர் கணபதிப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கினர். ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அன்னைபூபதி நினைவுநிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வட்டவை ரீதியாக நடைபெற்று வந்த தியாகச் சுடர் அன்னை பூபதியின் உண்ணாவிரதம் மற்றும் நினைவஞ்சலிக்கூட்டங்கள் வரிசையில் கடந்த வெள்ளிக்கிழமை உடுவில் பிரதேசத்தில் இணுவில் கந்தசாமி கோவில் முன்றலில் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்த உண்ணாவிரதம் காலை 8,00 மணிக்கு உடுவில் வட்டவை அரசியல் பொறுப்பாளர் திரு. கதிர் [சோபன்] தலைமையில் நடைபெற்றது உடுவில் வட்டவை மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி நிலா குத்து விளக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தார் மாலையில் இவ்உண்ணாவிரதம் யாழ். மாவட்டமக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவைச் சேர்ந்த திரு. செல்வநாயகம் அவர்களினால்நிறைவு செய்து வைக்கப்பட்டது.

முழங்காவிலில்

## அன்னை பூபதி நினைவு நிகழ்வுகள்

தியாகி அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவாக உண்ணாவிரதமும், அஞ்சலிக் கூட்டமும் முழங்காவில் பிரதேசத்தில் உள்ள பல பகுதிகளிலும் நடைபெற்றன.

இந்நிகழ்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை முழங்காவில் பிரதேசத்தில் உள்ள ஜெயபுரம், பத்தினிப்பாய், நல்லூர், பல்லவராயன்கட்டு, அரியாலை, நாகபடுவான், வெள்ளாங்குளம், முழங்காவில் ஆகிய இடங்களில் நடைபெற்றன.

இங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பா

## விடுதி சுற்றிவளைப்பு ஐம்பது இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கொழும்புக்கு சென்றிருந்த வடக்கு - கிழக்கு பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

மருதானை பொலிஸ் பகுதியில் இருக்கும் தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த இவர்கள், கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டமையால் புதுவருட தினத்தை பொலிஸ் நிலையத்திலேயே கழிக்க வேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளதாக தெரிகின்றது.

## உண. முத்திரை விநியோகம் உடன் ஆரம்பிக்க உத்தரவு

உணவு முத்திரை விநியோகத்தை உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கும் படி சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் வரட்சியினால் ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை அடுத்தே பிரேமதாசா இந்த உத்தரவை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### வீரத்தாய் பூபதி

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



புடமிட்ட தங்கம் போன்ற பூபதி அன்னை-எம்
இடர் கண்டு நித்தம் வெந்து இறங்கினார்-புனிதப் போரில்
அடலேறு வேங்கைகட்கும், அனைத்து தமிழீழவர்க்கும் இவர்
அன்னையர் திலகமானார் அகிம்சையின் தீபமானார்
நம் தமிழீழவர் நாடு நலிவது கண்டு
செந்தமிழன்னை துயர் துடைக்க விரைந்தார்
இந்தியப் படையினர் நடுவினிலே இடியாய் அன்னை இருந்தார் அத்தனை
இடையூறுகளிலும் திடமனம் கொண்டு திகழ்ந்தார்
வீரப்பெண்களிடையே விடுதலைத் தீயை வளர்த்தார் இவர்
தீரத்தின் திருவுருவாம் தியாகத்தின் பொக்கிசமாம்
அன்னையர் முன்னணித் தலைவியாயிருந்து அமைதிப் படையினர் ஆட்சிக் கொடுமையை எதிர்த்தார்
அனுதினம் விடுதலை வேண்டியே களத்தில் நெருப்பாய் ஒளிர்ந்தார்

சுபம்
ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்

(சி/4298)

## நினைவுகூருகின்றோம்...

## பரமகுரு தெய்வசீலன்
## (லெப். பெருமாள் கடற்புலி)

பிறப்பு 01. 02. 1975

வீரச்சாவு 09. 05, 1991

திதி: 28 04, 1992

ஆண் பிள்ளை இல்லையென்று தெய்வத்திடம் வரம் கேட்டு
தெய்வமே மனம் இரங்கி வரம் தந்ததால்
தெய்வசீலன் என பெயரிட்டு தெய்வா என அழைத்தோமடா
தெய்வா நீ வந்த வேளையிலிருந்து எங்கள் வீட்டில் தென்றல் வீசியதடா
உனது நையாண்டி பேச்சும் நயனச் சிரிப்பும் மற்றோரை மயக்குமடா

படிப்படியாக வளர்ந்து பதினான்கு வயதினிலே
அந்நியப் படையினர் கொடுமை கண்டு வெகுண்டாயோ
வீட்டைக் காப்பதிலும் பார்க்க நாட்டைக் காப்பதே மேல் என எண்ணி
தம்பி பிரபாவின் பாதையில் சென்றாயோ
வன்னிக் காட்டினிலே பால்ராஜின் அணியில் நின்று களம் பல கண்டாயோ

ஒரு வருட முடிவில் மூன்று நாள் லீவில் வந்து நீ களம் பல கண்ட சேதி
கேட்டு பூரித்து நின்றோமடா
அன்னியப் படையின் கிளிநொச்சி முகாமும் கொக்காவில் முகாமும்
குண்டு வைத்து தகர்த்த சேதி கேட்டு அதிர்ந்து நின்றோமடா
உனக்கு இந்தச் சின்ன வயதில் இவ்வளவு வீரமா என்று
மலைத்து நின்றோமடா
தெய்வம் தந்த தெய்வசீலனே பிரபா தந்த
பெருமாளாய் மாறி நின்றாயடா

பொட்டம்மானின் அணியில் நின்று எட்டப்பர் கூட்டத்தை
அழித்து ஒழித்தாயோ
பதினாறு வயதுக்குள் நீ செய்த வீரச்செயல்களினால்
லெப்டினன்ட் என்ற பதவியும் கிடைத்ததோ
இன்னும் பெரும் பதவிகள் எல்லாம் பெற்று வீரனாக
வருவாய் என்று பூரித்து நின்றோமடா
எங்களின் கடலிலே எவன் எம்மைப் பிடிப்பது என்று
கடற்புலியாய் மாறி டேவிற்றின் அணியில் சேர்ந்தாயோ
ஐயகோ நடுக்கடலில் வீரமுடன் போராடி நெஞ்சிலே
குண்டுபட்டு மாதகல் கடலிலே சங்கமம் ஆனாயோ
ஓராண்டு சென்றாலும் பெருமானாய் மாவீரர் வரிசையிலே
தமிழீழத்தில் தவழ்ந்து வருவாயடா

எங்கள் உயிர் இருக்கும் வரை
உன்னை மறக்க முடியாது

(சி-4279) அப்பா, அம்மா, அக்காமார், தம்பி

---

திருமதி ஆ. திவ்வியமலர் (ஜேர்மனி)
திருமதி கு. ஜெயமலர் (லண்டன்)
செல்வி சி. ஜோதினிமலர்
(மாணவி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

மருமக்கள்: திரு. சி. சபாபதி
திரு. ச. ஆறுமுகம்
திரு. இ. குமாரதாஸ்

பேரப்பிள்ளை:

(2482)

---

சியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சவுந்தர், மாணவர் இயக்கப் பொறுப்பாளர் திரு. ஆனந்தராஜ், பிரதேச மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் வினோதா ஆகியோரும், பெருந்திரளான மக்களும் கலந்து கொண்டு அன்னை பூபதியின் தியாகத்தை நினைவு கூர்ந்தனர்.

---

# அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

## விசுவமடு

சுண்டிக்குளம் தெற்கு பகுதியில் இயங்கிவரும் மரண ஆதார சங்கம் தனது வளர்ச்சி நிதிக்காக விற்பனை செய்து வந்த அதிர்ஷ்ட லாப லொத்தர் டிக்கற் கடந்த 13-04-92 புதுவருட தினத்தன்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டது. அதன் முடிவுகள் வருமாறு:

| | டிக்கற் இலக்கம் | | பெயர் | விலாசம் |
|---|---|---|---|---|
| 1-ம் | பரிசுக்குரிய சீட்டின் இல. | 1618 | த, ரவி | சந்தை, கிளிநொச்சி |
| 2-ம் | ,, ,, ,, | 813 | தி. யோஜினி | தம்பிராசாபுரம், உழவனூர், தருமபுரம். |
| 3-ம் | ,, ,, ,, | 518 | ஜெயரட்ணம் | D2 இராமநாதன் பாம், கிளிநொச்சி. |
| 4-ம் | ,, ,, ,, | 812 | த. சுஜீபன் | NO. 183, விசுவமடு. |
| 5-ம் | ,, ,, ,, | 133 | ம. நடராசா | ஈஸ்வரி கபே |
| | **ஆறுதல் பரிசுகள்** | | | |
| 1-ம் | ஆறுதல் பரிசுக்குரிய இல. | 1291 | த, தானு | உரும்பராய் கிழக்கு, உரும்பராய். |
| 2-ம் | ,, ,, ,, | 550 | A. P. கிருஷ்ண குமார் | NO. 292, 5-ம் யூனிற், இராமநாதபுரம். |
| 3-ம் | ,, ,, ,, | 1315 | பவீந்திரன் | செல்லையா கடைச்சந்தி, முரசுமோட்டை எண்ணெய்க்கடை. |
| 4-ம் | ,, ,, ,, | 1313 | சி. குகநாதன் | 224, 3-ம் யூனிற், முரசுமோட்டை. |
| 5-ம் | ,, ,, ,, | 389 | அன்னலிங்கம் | தச்சன் றோட், வட்டக்கச்சி. |

பரிசு பெற்ற அதிஷ்டசாலிகள் தங்களுடைய அதிர்ஷ்டச் சீட்டைக் கொண்டு வந்தால் மட்டுமே பரிசில்கள் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளும் முகவரி;

**மரண ஆதார சங்கம்,**
சுண்டிக்குளம் தெற்கு,
விசுவமடு, முல்லைத்தீவு,
தமிழீழம்.

(சி 4291)

---

# 1992-04-20

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில், பருத்தித்துறையில் சிறிலங்காப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜெயம் / ரமணன்** (இராசசேகரம் பிரேமச்சந்திரன் - ஊறணி, வல்வெட்டித்துறை.)

**லெப். கந்தன் ரவி** (அருட்பிரகாசம் எமில் சத்தியசீலன் - தேவமாதா கோயிலடி, தும்பளை, பருத்தித்துறை.)

1988 ஆம் ஆண்டு கெருடாவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ரகீம்** (சிவானந்தையர் செல்வராசா - செல்வச்சன்னதி கோயிலடி, தொண்டமானாறு.)

1989 ஆண்டு மணலாற்றில் கிணறு வெட்டும் பணியின்போது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் எம்மைப் பிரிந்த -

**கிளாஸ் நிக்கோ** (கதிரமலை காந்தன் - கல்குடா, மட்டக்களப்பு.)

சுளிபுரத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**லெப். இன்பம்** (இராசையா ஜெயசீல கிருஸ்ணன் - இல:10, இன்பம் வீதி, வண்ணார்பண்ணை,)

இதே சம்பவத்தின் போது, விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**கபில்** (வேலும்மயிலும் சிவகுமார் - சிவன்கோயிலடி,) வட்டுக்கோட்டை.)

**நெல்சன்** (பர்ணபாலா நோபேட் ஜோர்ச் - 9 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**திலக்** (அழகையா ஜெயபாலு - வந்தாறுமூலை, மட்டக்களப்பு.)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**யூசி** (பங்கிராஸ் பீற்றர் - பேசாலை, மன்னார்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4296)

## சிந்தனைக்கு

சூழ்நிலையை அடக்கி ஆளும் உந்துதலே செயலாக்கத்தின் அடிப்படை அம்சம்.

- ஜான்டுயி -


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 20-04-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 05


## 'அரசியல் பொறி'

"ஒரு புறம் யுத்தத்தைத் தீவிரப்படுத்திக்கொண்டு மறுபுறம் சமாதானத்திற்கான பேச்சுக்களை நடத்தி புலிகள் மீது ஒரு நெருக்குதலைப் போட்டு ஒரு தீர்வைத் திணித்து விடலாம் எனச் சிங்கள அரசு எண்ணுகின்றது. போரும், பேச்சும் என்ற இரட்டை வேட அணுகுமுறையை எமது இயக்கம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை" இவ்வாறு தலைவர் பிரபாகரன் அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

சிங்களப் பேரினவாத சக்திகள் எப்பொழுதுமே தமிழர் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இதய சுத்தியுடன் செயற்படவில்லை. தமக்கு நெருக்கடிகள் உருவாகும் போது, பிரச்சினைகளைத் தீர்க்க முற்படுவது போன்று பாசாங்கு செய்து கொண்டு, தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைக்கும், தமிழர் மண்ணை ஆக்கிரமிப்பதற்குமான முயற்சியிலேயே ஈடுபட்டும் வந்துள்ளனர். தற்பொழுதும் அவ்வாறான ஓர் அரசியல் அணுகுமுறையிலேயே ஒருபுறம் பேச்சுவார்த்தை என்றும், மறுபுறம் யுத்தத்தை தீவிரமாக்கும் இரட்டை வேட அணுகுமுறையைக் கைக்கொள்கின்றனர்.

சிறிலங்கா இராணுவம் கடந்த வருடத்தின் மத்தியிலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பாரிய படை எடுப்பிற்கென பாரிய யுத்த ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது. பெருமளவு இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவித்துள்ள சிறிலங்கா இராணுவம் பெரும் படைப் பெருக்கத்தையும் செய்துள்ளது இதேவேளை, யாழ்ப்பாண குடாநாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவென இராணுவ அதிகார அமைப்பிலும் பாரிய மாற்றங்களை செய்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் மேற் கொண்டுள்ள இந் நடவடிக்கையானது, இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே வழி என்பதையும் காட்டி நிற்பதை தெளிவாக வெளிக்காட்டும் அம்சமாகும். இதனைச் சிறிலங்கா ஜனாதிபதியும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில், இராணுவ அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள சிறிலங்கா ஜனாதிபதி 'தனி நபர்கள் முக்கியமல்ல. யுத்தத்தை விரைவில் வெல்வதே இறுதி நோக்கமாக இருக்க வேண்டும்' என்றார். இதில் இருந்து இனப்பிரச்சினையில் சிறிலங்கா அரசாங்கத்தின் அணுகுமுறை என்ன என்பது ஐயத்திற்கு இடமின்றி தெரிகிறது.

# பழமைவாத சமுதாயத்திலிருந்து போராட்டத்தில் குதித்த அன்னை

-- ஜெயா

(யாழ்ப்பாணம்)

"பழமைவாத சித்தாந்தங்களைக் கொண்ட சமுதாய அமைப்பொன்றில் இருந்து புரட்சிகரமான போராட்டத்தில் குதித்தவர் தியாகி அன்னை பூபதி. அன்னை பூபதி போன்ற தியாகிகளது அளப்பரிய தியாகத்தினால் தான் எமது தாயக விடுதலைப் போராட்டம் இன்றுசர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்திருக்கிறது"

இவ்வாறு நேற்று யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தியாகி அன்னை பூபதியின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிப்பொறுப்பாளர் செல்வி ஜெயா அவர்கள் கூறினார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் பொழுது, தியாகி பூபதி தமிழீழ மக்கள் மீதும், மண் மீதும் கொண்ட அளப்பரிய பற்றின் காரணமாகவே வயதெல்லை பிற்போக்கான சமூக கட்டுமானங்கள் ஆகியவற்றை உடைத்தெறிந்து முற்போக்கான சிந்தனையுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு கொண்டார். இவரது போராட்டத்தின் பின்னரே இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் தமிழீழத்தில் மேற் கொண்ட அட்டூழியங்கள் அனைத்தையும் உலக அரங்கு அறிந்து கொண்டது என்றார்.

விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் ஒழுங்கு செய்த இவ் அஞ்சலிக் கூட்டத்தில் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. புலேந்திரன் விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க தென்மராட்சி பொறுப்பாளர் திரு. புரட்சி ஆகியோர் உட்பட மேலும் சில பிரமுகர்களும் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்தினர். (பா)

# ஐ. தே. க. மேதின கூட்டம்; சார்க் நாடுகளுக்கு அழைப்பு

- பிரேமதாசா

(கொழும்பு)

கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி எடுக்கவிருக்கும் மேதின விழாவில் கலந்து கொள்ள வரும்படி சார்க் நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்று நேற்று முன்தினம் ஐ. தே. க. தொழிற் சங்கத் தலைவர்கள் மத்தியில் பேசிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தெரிவித்தார்.

அத்துடன் சார்க் நாடுகளைச் சேர்ந்த கலாசாரக் குழுக்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# 26, 27 இல் எழுதுவினைஞர் அதிசிறப்புப் பரீட்சை

எழுதுவினைஞர் அதிசிறப்பு வகுப்புக்கான பரீட்சை வரும் 26, 27 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

சுகாதார திணைக்களத்தின் துணை மருத்துவதரம்/இடைமட்ட தொழில் நுட்பம் ஆட்சேர்ப்புப்பரீட்சை வரும் 25-ம் திகதி நடைபெறவுள்ளது.

# மூன்று மீனவர்களை ஐந்து நாளாக காணவில்லை

(குருநகர்)

மீன்பிடிக்க வள்ளத்தில் சென்ற மூவர் ஐந்து நாட்களாகியும் திரும்பி வரவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

கடந்த 14-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குருநகரில் இருந்து கடலுக்குச் சென்றவர்களே இன்னமும் திரும்பி வராதவர்களாவர்.

முதல் நாள் செல்லும் மீன்பிடியாளர்கள் மறுநாள் திரும்பி விடுவது வழக்கம்.

மீனவர்கள் ஐந்து நாட்களாகியும் திரும்பாததால் உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளதாக அறியப்படுகிறது.

குருநகரைச் சேர்ந்த மனவல்தாஸன் எஸ்பீரியல் (வயது 24) அரியராசா லிக்ஸன் [வயது 25] போனாஸ் சுரேஷ் குமார் (ராஜு வயது 26) ஆகியோரே திரும்பிவராதவர்களாவர். (21)

## கடும் சோதனை

அம்பாறை குண்டு வெடிப்புச்சம்பவத்தின் பின் ஊவா மாநிலம் முழுவதும் வாகனங்கள் கடும் சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

குறிப்பாக பதுளை, பசறை பகுதிகளில் சோதனைகள் மிகக் கடுமையாகவே உள்ளதாகவும் ஊவாமாகாணம் முழுவதும் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகள் மறைந்திருப்பதாக தந்தி அனுப்பியவர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகள் மறைந்திருப்பதாக தந்தி மூலம் ஆந்திரா பொலிஸ்அதிகாரிகளுக்கு அறிவிக்க முயன்ற ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இது பற்றி தெரியவருவதாவது விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் திருப்பதியிலுள்ள கட்டடமொன்றில்தலை மறைவாக உள்ளனர் என்ற வாசகத்தைக் கொண்ட செய்தியை இவர் அனுப்ப முனைந்தார்.

சந்தேகம் கொண்ட தபால் அலுவலக ஊழியர்கள் இவருடைய விலாசத்தை தெளிவாக எழுதும்படி கேட்டபோது தந்தியை கிழித்தெறிந்துவிட்டு ஓட முயன்றார். அதனையடுத்து அவர் பொது மக்களின் உதவியோடு பொலிசாரால் கைது செய்யப்பட்டார்.

திருப்பதியில் காங்கிரஸ் மாநாடு நடைபெறுவதும் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆதாரம் காட்டிப் பெறலாம்

வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போதுபிரயாணி ஒருவரினால் கைமாறிதவறுதலாக எடுத்து செல்லப்பட்ட பிரயாணப்பையொன்று முத்திரைச் சந்தி போக்குவரத்துக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களுடன் உரிமை கோரிப் பெற்றுக்கொள்ளலாமென முத்திரைச் சந்தியில் இயங்கும் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்து உள்ளனர்.

# பெருந்தோட்டங்கள் தனியார் மயம் மகாநாயக்கர்கள் கண்டனம்

(கொழும்பு)

பௌத்த சங்கங்கள் நான்கு பிரிவுகளையும் சேர்ந்த மகாநாயக்கர்கள் அமைப்பு, அரசு பெருந்தோட்டங்களைத் தனியார் மயமாக்குவதைக் கண்டித்துள்ளது. இந்த அமைப்பும், மற்றும் பல பௌத்த சங்கங்களும் இணைந்து, இது தொடர்பாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளன.

1987 இல் கனாநிதி ஏ. ஜெ. வில்சன் அமெரிக்க காங்கிரஸ்சுக்குச் சமர்ப்பித்த பரிந்துரையில் ஊவாமாகாணத்தை (பதுளைமாவட்டம்) ஒருதமிழ் மாகாணமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே பெருந்தோட்டங்களைத் தனியார் சொத்தாக்குவது பிரச்சினையை மேலும்சிக்கலாக்கிவிடும்என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5,00,000 ஹெக்ரர் நிலம் குடியேற்ற ஆட்சிக் காலத்தில் பௌத்த சிங்களவரிடமிருந்து தவறான முறையில் சுவீகரிக்கப்பட்டதாக எமது வரலாற்றுப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. குடியேற்ற ஆட்சியாளர் நிலத்தை அபகரித்துக் கொண்டதால் கண்டி விவசாயிகள் வறியவர்களாக்கப் பட்டனர். சோல்பரி ஆணைக்குழுவும் (1943), கண்டி விவசாயிகள் ஆணைக்குழுவும் (1951) இதனை ஏற்றுக் கொள்ளுகின்றன. ஆகவே எமது அமைப்பு பெருந்தோட்டங்களாக தனியார் மயமாக்குவதை நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளுகின்றது - இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நட்டத்தில் நடந்துகொண்டிருக்கும் அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவது பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தாது. தனியார் மயமாக்குவதன் மூலம் நட்டத்தை ஈடு செய்யலாம் என்பது வெறும் அனுமானமாகும் என்றும் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஐ: நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கும்நிரந்தர இடம்?

- பிரெண்ட் ஸ்கோகிராப்ட்

(வாஷிங்டன்)

ஜப்பானுக்கும் ஜேர்மனிக்கும் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்து ...

சிந்திக்க வேண்டியுள்ளது. பாதுகாப்புச் சபை ஐ. நா. ...

பாதுகாப்புச் சபையை மறுசீரமைக்கும் பிரச்சினை பற்றி ...

## ஆப்கானிஸ்தானின்

# தற்காலிக அதிபராக அப்துல்றகீம் பொறுப்பேற்பு

ஆப்கானிஸ்தானின் தற்காலிக அதிபராக துணைஅதிபர் அப்துல் றகீம் ஹதீப் பொறுப்பேற்றுள்ளார். இது பற்றி நேற்று முன்தினம்காபூல் ...

வேறுபாடுகளை மறந்துவிட்டு ஆப்கானிஸ்தானில் ஒழுங்கான முறையில் ஆட்சி மாற்றம் நடைபெற உதவவேண்டும் என பாகிஸ்தான் பிரதமர் ...

ஆனால், சிறிலங்கா ஜனாதிபதியின் பெரும்பாலான பேச்சும், முயற்சிகளும் அரசாங்கம் சமாதானத்தை நாடி நிற்பது போலவும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சிப்பது போலவும், வெளிக்காட்டப்படுகின்றது. கடந்த வருடத்தின் இறுதியில் இருந்து இனப்பிரச்சினைகள் தீர்வு குறித்து ஆராயவெனவும், பேச்சு நடத்த எனவும் பல்வேறு சமாதானத் தூதுக் குழுக்கள் யாழ்ப்பாணம் வந்து போயின. முதலில் சர்வதேச சமாதானக் குழுவான 'குவேக்ர்கஸ்' வந்து போயினர். பின்னர் அமைச்சர் தொண்டமான் முயற்சிகள் எடுத்தார். பின்னர் பல்வேறு கத்தோலிக்க - கிறிஸ்தவ நல்லெண்ணத் தூதுக்குழுக்கள் வந்து போயின. தற்பொழுது பௌத்த நல்லெண்ண தூதுக்குழு ஒன்று விரைவில் வரலாம் எனச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இச் சமாதான, நல்லெண்ண தூதுக்குழுக்கள் யாவும் யாழ்ப்பாண விஜயம் மேற்கொண்ட போதும், அல்லது சமாதானத்திற்கான முயற்சிகள் மேற்கொண்ட போதும், சிறிலங்கா அரசாங்கம் அவற்றிற்கு ஆதரவு அளிப்பதாகவே காட்டிக் கொண்டது. ஆனால் உண்மை, நிலை அவ்வாறில்லை. அரசாங்கம் ஓர் அரசியல் ரீதியான தீர்வை நோக்கி முன்னேறியதாக இல்லை. அரசாங்கம் ஓர் அரசியல் தீர்வை சமாதானம் மூலம் ஏற்படுத்த விரும்பியிருப்பின் யாழ்ப்பாண விஜயம் செய்து விட்டு திரும்பிய சமாதான நல்லெண்ணத் தூதுக் குழுக்கள் யுத்த, நிறுத்தம் பேச்சுவார்த்தை தொடர்பாக விடுத்த கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்திருக்கும், அல்லது அதற்கான சூழ்நிலை ஒன்றை உருவாக்க முயற்சித்திருக்கும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு எதுவும் செய்யவில்லை.

ஆனால், இச் சமாதானப் பேச்சுக்களில் அக்கறையாக இருப்பதாகக் காட்டிக் கொண்ட அரசாங்கம் அதன் மூலமும் இரு காரியங்களை சாதித்தது. உதவி வழங்கும் நாடுகள் இனப்பிரச்சினை தீர்வுடன் தமது உதவித்திட்டத்தை ஓரளவு இணைக்க முற்பட்டபோது தமது போலியான சமாதான முயற்சிகளைக் காட்டி உதவிகளைத் தாராளமாகப் பெற்றுக் கொண்டது. இரண்டாவது தமது இராணுவத் தயாரிப்பிற்குத் தேவையான கால இடைவெளியை பெறுவதற்கும் பயன் படுத்திக் கொண்டது. இதேவேளை அரசாங்கம் பச்சைக் கொடி காட்டிய சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகளிடம் இருந்து சாதகமான பதில் ஏதும் கிடைக்கவில்லை. என்று உண்மைக்குப் புறம்பான ஓர் நிலையை ஏற்படுத்துவதிலும் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

இதனைத் தமிழ் மக்கள்தெளிவாகப்புரிந்துகொள்ள வேண்டும் அதாவது தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டது போல் ''எமது எதிரிகளோ சமாதான முயற்சியை ஒரு அரசியல் பொறியாகக்கையாளவே விரும்புகிறான்'' என்பதேயாகும்.

---

வம் கொடுக்கப்பட்டால் இந்தியா பற்றியும் பரிசீலிக்கப் பட வேண்டும் என அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரென்ட் ஸ்கோ கிராப்ட் தெரிவித்துள்ளார்.

என். பி. ஸி. தொலைக் காட்சிக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை அமைப்பு பற்றி கடுமையாக வில் மிகவும் சக்தி வாய்ந்த கிளை ஆகும் என்றும்,

ஜப்பானும் ஜேர்மனியும் நிரந்தர அங்கத்துவம் பெறுவதானால் இந்தியாவின் நிலை என்ன? மற்றோர் கேள்வியும் உள்ளது. நிரந்தர ஸ்தானம் பிரித்தானியாவிற்கா அல்லது ஐரோப்பிய சமூகத்திற்காக சேர வேண்டும் என்ற கேள்வியே அது என்றும் அவர் தெரிவித்தார்.

சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. கிழக்கு ஜேர்மனி வீழ்ச்சியடைந்த பின் பொருளாதார ரீதியில் பலம் பெற்ற ஐக்கிய ஜேர்மனி உருவெடுத்திருக்கிறது. ஜப்பான் ஒரு பொருளாதார வல்லரசாக வளர்ந்திருக்கிறது. உலகின் மிகப் பெரும் ஜனநாயக நாடான இந்தியா பற்றியும் தொழில் வள நாடுகள் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி வேட்பாளராக முன் வந்திருக்கும் மில்கிளின்டன் ஜப்பான், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குப் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் வழங்கப்படவேண்டும் எனக் கூறியிருப்பது பற்றி புஷ் நிர்வாகம் என்ன கருதுகிறது என்று கேட்டபோதே அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

---

வானொலி அறிவித்தது மேலும் முன்னாள் அதிபர் டாக்டர் நஜிபுல்லாவின் எல்லா அதிகாரங்களும் பறிக்கப் பட்ட இருதினங்களின் பின்னர் அப்துல் றகீம் ஹத்தீப் தற்காலிக அதிபராக பதவியேற்றுள்ளார் எனவும் காபூல் சிறைகளில் தடுத்துவைக்கப் பட்டிருந்த அரசியல் கைதிகளில் அறுநூறுக்கும் அதிகமானோர் விடுதலை செய்யப் பட்டனர் எனவும் காபூல் வானொலி அறிவித்தது.

இதனிடையே பாகிஸ்தான் பிரதமர் நவாப்ஷெரீப் ஆப்கானிஸ்தானின் வடக்கு புறநகரமான பெஷாவருக்கு விஜயம் செய்து கிளர்ச்சிக்காரர்களுடன் பேச்சு நடத்தி மேலும் ரத்தக்களரி ஏற்படுவதை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். கிளர்ச்சியாளர்களிடையே இருக்கும் போட்டிக் குழுக்கள் தங்களிடையே இருக்கும் நவாப்ஷெரீப் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் ஆப்கானிஸ்தான் அரசு சரணடையாவிட்டால் கிளர்ச்சிப் படைகள் தாக்குதல் நடத்தும் என்று தற்போது காபூல் நகரைச் சூழவும் நிலைகொண்டிருக்கும் கிளர்ச்சிப் படைகளின் தலைவர் அப்துல் கேக் மாந்தியார் அறிவித்துள்ளார் அத்துடன் ஆப்கானிஸ்தானின் வடமேற்குப் பகுதியிலுள்ள சாரா மாகாணத்தில் இருக்கும் சிந்தாத் விமானதளத்தை இரண்டு கிளர்ச்சிக் குழுக்கள் தம்வசப்படுத்தியிருப்பதாக இஸ்லாமாபாத்திலிருந்துவெளிவரும் செய்திகள் கூறுகின்றன இந்த விமானத்தளத்திலிருந்த எல்லாஇராணுவ மற்றும் சிவிலியன் பணியாளர்கள் கிளர்ச்சிக்காரர்களிடம் சரணடைந்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

---

ஈரானில்

# தேர்தல்களில் மோசடி எம்.பி. குற்றச்சாட்டு

(தெஹ்ரான்)

ஈரானில் கடந்த வாரம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது மோசடியும் வன்முறைகளும் இடம்பெற்ற தாக ஈரானிய எம்.பி ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

வெள்ளிக்கிழமை நடந்த தேர்தலின்போது தென்பகுதியில் தேர்தல் மோசடியை எதிர்த்துஆர்ப்பாட்டம்நடாத்தியவர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் தென்பகுதி எம்.பி. விடுத்தகுற்றச்சாட்டைபொருஜான் பொலிஸார் மறுத்துள்ளனர்.

270 வேட்பாளர்களில் 133 வேட்பாளர்கள் தெரிவாகிவிட்டதாகவும் ஏனையமுடிவுகள் செவ்வாய்க்கிழமைக்குள் வந்துவிடும் எனவும் உள்துறை அமைச்சர் அப்துல்லா நூரித் கருத்து வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் மே 8ம் திகதி இரண்டாவது சுற்றுத்தேர்தல் இடம் பெறும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# லண்டனில் வெடிபொருள் பெருமளவில் மீட்பு

(லண்டன்)

லண்டனில் இடம் பெற்று வரும் ஐரிஸ் குடியரசு இராணுவ குண்டுத்தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை நடாத்திவரும் பொலிசார் லண்டன் நகர சுற்றுப்புறமொன்றிலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களையும் வெடிப்பெருான்களையும் கைப்பற்றியுள்ளனர்.

வடஇங்கிலாந்தில் துப்பாக்கிச் சூடொன்றுக்கு இலக்கான பிரிட்டிஷ் இராணுவவீரர் ஒருவர் செவ்வாயன்று உயிர்துறந்தார். இவரது இக்கொலைக்கு ஐரிஸ் தேசிய விடுதலை இராணுவம் என்னும் மற்றோர் கெரில்லாக்குழு உரிமை கோரியுள்ளது.

லண்டனின் ஐரிஷ் குடியரசு இராணுவம் வைத்த குண்டொன்றில் மூவர் கொல்லப்பட்டதோடு மேலும் 91 பேர் காயமடைந்தனர் இதற்கு பின்னரே இராணுவ வீரர் சுடப்பட்டார்.

ஐரிஸ்தேசிய விடுதலை 'இராணுவம் மேலும் பல தாக்குதல்களை நடத்தப்போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

# சூடான் நிராகரிப்பு

சூடான் பாராளுமன்றம் லிபியாவுக்கு எதிரான ஐ.நா பாதுகாப்புச் சபையின் தடைகளை நிராகரித்துள்ளது தடைகள் 'நியாயமற்றது' என்றும் பாராளுமன்றம் கூறியுள்ளது.

லிபியாவுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகள்அடிப்படை ஒழுக்கவிதிகளுக்கு மாறாகவுள்ளன என்றும் அது இராணுவ தலையீட்டுக்கு வழி வகுக்கும் என்றும் பாராளுமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது

ஐ நாவின் தடையை நிராகரித்த முதல் அரேபிய முஸ்லிம் நாடு சூடான் என்பது குறிப்பிடத்தக்கது சூடானின் இந்த முன்மாதிரியை ஏனைய அரேபிய நாடுகளும் பின்பற்றும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆப்கான் தலைநகரை கிளர்ச்சியாளர் முற்றுகை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஆளும் கட்சி தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் அதே வேளையில் கிளர்ச்சிப் படைகள் காபூல் நகரத்தைச் சுற்றி வளைத்துள்ளனர்.

காபூல் நகரம் பகைவர்களுக்கிடையேயான யுத்த களமாக மாறக்கூடாது என்பது தமது விருப்பமாகும் என்று ஆளும் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆப்கானிஸ்தானின் மேற்கு தெற்கு பகுதிகளில் முஜாகுதீன் கெரில்லாக்களின் இரு குழுக்களுக்கிடையில் ஏற்கனவே மோதல்கள் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தீவிரவாத குழுவொன்றின் தலைவர் குல்பத்தின் ஹெல்மத்தயா தமது அணியினர் மேற்குப்புற நகரமான ஹேரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து காபூலுக்குள் பிரவேசிக்குமாறு தாம் உத்தரவிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முஜாகுதீன் கெரில்லா தலைவர்களில் சக்திவாய்ந்தவர் எனகருதப்படும் அஹமட்சா மசூத் உடன் பேச்சுவார்த்தை நடாத்த ஆப்கானிஸ்தான் வெளியுறவு அமைச்சர் முயற்சி செய்துள்ளார்.

கடைசியாகக்கிடைத்த செய்திகளின்படி அஹமட்சா மசூதுடன் ஆப்கானிஸ்தான் அரசாங்கம் ஒப்பந்தமொன்றை செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவருடன் கூட்டாக அரசாங்கத்தை அமைக்க தற்போதைய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழநாதம்

# மணலாற்றில் 3000 சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தியதாக அமைச்சர் பெருமிதம்

(கொழும்பு)

மகாவலி 'எல்'வலையமென ஆரம்பிக்கப்பட்டபோது அறுபது குடும்பங்களை மட்டுமே கொண்டிருந்த வெலி ஓயா பிரதேசத்தில்இப்போது மூவாயிரம் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுவிட்டதாக மகாவலி அபிவிருத்தியமைச்சர் காமினி அத்துகோறள தெரிவித்தார்.

வெலி ஓயாப் பகுதியிலிருக்கும் சம்பந்நுவர கிராமத்தை மின்மயமாக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசிய அவர் மேலும் கூறுகையில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வெலி ஓயா குடியேற்றத்திட்டம் துரிதமாக்கப்பட்டிருப்பதாகவும், அமைச்சரவை மட்ட உபகுழுவொன்று அமைக்கப்பட்டு குடியேற்றவாசிகளுக்குத் தேவையான அனைத்தும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுர்கு ஊடாக உடனுக்குடன கிடைக்க வழி செய்யப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, தபால், தொலைத்தொடர்பு, குடிநீர்விநியோகம் சமூக சேவை, புனர்வாழ்வு மற்றும் பெருந்தெருக்கள் உட்பட அனைத்துவசதிகளும் குடியேற்றவாசிகளுக்குக் கிடைக்கச்செய்ய தாம் உறுதிபூண்டிருப்பதாகவும், இக்குடியேற்றவாசிகள் புதுயுகம் ஒன்றைக் காண தன்னாலான அனைத்தும் செய்யப்படுமெனவும் உத்தரவாதமளித்தார்.

மேலும் வெலிஓயாப் பிராந்தியத்தின் மையமான சம்பந்நுவர நகரில் எதிர்வரும் அக்டோபர் மாதத்திற்குமுன்பாக சகல வசதிகளுடனும் கூடிய ஆதார வைத்தியசாலை அமைக்கப்பட்டுவிடும் எனவும் கூறினார்.

இவ்வைபவத்தில் கலந்து கொண்ட அனுராதபுரம் மாவட்ட எம்.பி. டி. எம்.ஆரியதாசா பேசுகையில், இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் மிகவும் பதற்றத்திற்குரியதொரு சூழலில் வாழ்வதாகவும், அதனால் அவர்களுக்குத் தேவையான சகல வசதிகளும் உடனுக்குடன் செய்து தரப்பட வேண்டியது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

## பொலிஸ் நிலையம்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ளதும், சாமாந்துறைக்கு சமீபமாகவும் இருக்கும் தமிழ் மக்கள் பெருமளவில் வாழ்ந்துவரும் வீரமுனை கிராமத்தில் புதிய பொலிஸ் நிலையம் ஒன்றை நிறுவ சிறிலங்கா பொலிசார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

## சிறிமாவின் பிறந்தநாளில் பெருமளவு மக்கள்

(கொழும்பு)

றோஸ்மீட் பளேசில் இருக்கும் தமது இல்லத்தில் கடந்த வெள்ளியன்று தனது எழுபத்தாறாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவருமான சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்கா நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் றோஸ்மீட் பிளேசில் இருக்கும் சிறிமாவோவின் இல்லத்தில் பெருந்தொகையான மக்கள் கூடிய முதலாவது நிகழ்வாக அவதானிகள் இதனை வர்ணித்தனர்.

கண்ணீர் மல்கியபடி வந்த இளம்பெண் சிறிமாவோவிற்கு நல்லாசி வேண்டி தினமும் 'தசசில்' கடைப்பிடிப்பதாகவும், 'போதி பூஜை' நடத்துவதாகவும் தெரிவித்தார்.

ஏராளமான சாதாரண பொதுமக்களுடன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரும் இவ்வைபவத்தில் கலந்து திருமதி சிறிமாவோவிற்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

தங்க நிறச்சேலை அணிந்திருந்த திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் அவரது புதல்வர்களான சுனேத்திரா, சந்திரிகா ஆகியோரும் பேரர்களான விமுக்தி, சிறிமாவோ ஆகியோரும் காணப்பட்டனர்.

## பொலிஸ் அதிகாரிகள் சேவை நீடிப்பால் பதவி உயர்வு பாதிப்பு

(கொழும்பு)

ஓய்வு பெறவேண்டிய வயது வந்தும் அரசியல் மற்றும் காரணங்களால் சேவை நீடிப்புப் பெற்றுத் தொடர்ந்தும் பதவியிலிருக்கும் பொலிஸ் அதிகாரிகளினால்மற்றப்பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களத்தின் மதிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது.

பத்து வருடப் பொலிஸ் சேவைக்குப் பிறகு இன்ஸ்பெக்டர் பதவியைப் பெறும் ஒருவர், அந்தப் பதவியில் ஐந்து வருட சேவையின் பின்னர் ஏ. எஸ்.பி பதவி உயர்வுக்குத் தகுதி பெறுகிறார்.

ஆனால், தொடர்ச்சியாக 24 வருடங்கள் சேவையிலுள்ள பல பொலிசார் எவ்விதமான பதவிஉயர்வுமில்லாமல் சேவையிலுள்ளார்கள். இவர்கள் வழக்கமான பதவி உயர்வு நன்மைகளைப் பெற முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பதவி உயர்வுக்கு இப்படியொரு 'முட்டுக்கட்டை' ஏற்பட்டுள்ளதால் மூத்த உயர் அதிகாரிகளுக்கும், இளைய பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமைச் செயலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பலாலி இராணுவ முகாமில் கயிறிழுத்தல் போட்டி பெண்கள் வெற்றியாம்

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாமில் இராணுவத்தினருக்கும், அங்கு பிரசன்னமாயிருந்த பெண்கள் சிலருக்கும் இடையே இடம்பெற்ற கயிறிழுப்பு போட்டியில் பெண்களே வெற்றிபெற்றனர்.

அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதியின் பாரியாரும், சேவா வனிதா இயக்கத்தின் தலைவியுமான ஹேமா பிரேமதாசா வடபகுதி இராணுவ முகாம்களுக்கு திடீர் விஜயம் செய்தபோது இந்த கயிறிழுப்பு போட்டியை ஒழுங்கு செய்தார். பிரிகேடியர் விஜய

## மலையக இளைஞர்கள் இன்னும் விடுவிக்க வில்லை

(பதுளை)

3 மாதங்களில் பெற்றுள்ளார்கள்.

மார்ச் மாதத்தில் நாய்க்

செய்வதாக பேச்சு வார்த்தை

# இந்திய தீவிரவாதிகளுக்கு ஆதாரவு பாகிஸ்தான் மீது குற்றச் சாட்டு

(சிறிநகர்)

பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு பயிற்சியும் ஒத்தாசையும் அளித்து இந்திய எல்லைக்குள் அனுப்பி வைப்பதாக இந்திய உள்நாட்டமைச்சர் சவான் பாகிஸ்தான் மீது மீண்டும் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜம்மு - காஷ்மீர்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் ஜனநாயக முறைப்படி அங்கு தெரிவு செய்யப்படும் அரசாங்கத்துடன் பேச்சு நடாத்தவும் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

தற்போது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ராஜதந்திர ரீதியான சர்ச்சை எழுந்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புது டில்லியிலுள்ள பாகிஸ்தான் ராஜதந்திரி ஒருவரை அவர் உளவாளிஎனவும் அவர் இரகசிய ஆவணங்களைக் கொள்வனவு செய்யும்போது கையும்மெய்யுமாக பிடிபட்டதாகவும் இந்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன

இதேவேளை பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சு இந்திய உயர்ஸ்தானிகரை அழைத்து அந்த ராஜதந்திரி மோசமாக நடத்தப்பட்டுள்ளமைகுறித்து கண்டனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை ஜம்மு - காஷ்மீரில் மிக விரைவிலேயே தேர்தல்களைநடாத்துவதற்கு இந்திய அரசு உத்தேசித்திருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி சவான் தெரிவித்துள்ளார்.

எல்லைப் பகுதிகளான பூஞ்ச் மற்றும் ரதோரிப் பகுதிகளுக்குச் சென்று திரும்பிய சவான் ஜம்முவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

தேர்தல்களை நடாத்துவதற்குரிய சாதகமான சூழல் ஜம்மு-காஷ்மீரில் நிலவுவதால் தேர்தல்களை நடாத்தவிருப்பதாகவும்;

சட்டப் பேரவை மற்றும் லோக்சபா இடங்களுக்கான தேர்தல்களும், பஞ்சாயத்து மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களும் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

## திருப்பதி மாநாட்டில் தமிழக கேரள காங்கிரஸ் கட்சியினர் மோதல்

(பெங்களூர்)

திருப்பதியில் நடந்த இந்திரா காங்கிரஸ் மாநாட்டிற்குச்சென்றதமிழ்நாடு, கேரளா மாநிலங்களைச் சேர்ந்த இ. காங்கிரஸ் தொண்டர்களிடையே கைகலப்பும், மோதலும் ஏற்பட்டதுஎன்றும்அமைதியை ஏற்படுத்த பொலிசார் தடி அடி நடத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிசார் நடத்திய தடியடியில் பதினைந்து சேவாதலத் தொண்டர்கள் காயம் அடைந்தனர் என்றும் கூறப்படுகிறது.

## வீரச்சாவு

### மேஜர் வளர்மதி

என்ற பெண்போராளி கடந்த 16 ஆம் திகதி மாலை வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### லெப். நரேன்

தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் நரேன்(தந்தியோ தால் மேதா விக்டர் டலிமா சிறுக்குளம், பரப்பாங்கண்டல் உயிலங்குளம் மன்னார் )

## வடபகுதி

வெட்டித்துறை அம்மன் கோயிலடியில் நடைபெற்றது

தென்மராட்சிப்பிரிவில் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் முளங்காவில், பூநகரி, நாகபடுவான், கரியாலை போன்ற பல்வேறு இடங்களிலும் இந்த நினைவஞ்சலிக் கூட்டங்களும் உண்ணாவிரத

## மேதின

கலந்துகொண்டனர்.

தமிழீழ அரசியற் பொறுப்பாளர் திரு தமிழ்மாறன் தனதுரையில் நெருக்கடிகள் மத்தியிலும் உழைக்கும் மக்கள் சகலருக்குமான பாதிப்புக்களை வெளிக்கொணரும் நாளாக மேநாளை முன்னெடுப்பது தொழிற்சங்க வரலாற்றில் முக்கிய பரிணாம கட்டம் எனவும், இதன் வீச்சு சர்வதேசிய பரப்புக்களைத் தொடுமாதலால் தொழிலாளர்கள் இம்முறைசிறப்பாக முனைப்புடன் செயற்பட்டு சகல ஒடுக்குமுறைகளுக்கும் போர் முகம் காட்டும் எழுச்சி நாளாக சிறப்பிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனக் கூறினார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி பேரினவாதத்தின் கொடூரக்கரங்கள் சகலரையுமே பாதிப்புக்குள்ளாக்குவதால் வீறார்ந்த உழைக்கும் மக்கள்; மேலானை பேரினவாத விலங்குகளை உடைத்தெறிவதற்கான விடுதலைப் பேராவலை வெளிக்காட்டும் நாளாக ஒழுங்கமைக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

அனைத்து நிறுவனங்களினதும் கருத்துப்பரிமாற்றத்தின் பின்னர் தேச விடுதலைக்கான அறை கூவலை விடுக்கும் நாளாக மேநாளை ஒழுங்கமைப்புகளுக்கான செயற்பாட்

## உதைபந்தாட்டப் போட்டி

லெப்டினன் கேணல் விக்ரர் ஞாபகார்த்தமாக 1986 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட '' ஒஸ்கா '' விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்று இன்று 5 00 மணிக்குகோண்டாவில்குமரன் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில்இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து திருமலை நட்சத்திரம் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

## இன்றைய போட்டிகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் கிழக்கு பிரிவுக்கான போட்டியில் நாவாந்துறை சென்றிக்கலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இந்து இளைஞர் விளையாட்டு கழகம் மோதவுள்ளது. இப்போட்டி யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சிப் பிரிவுக்கான

இளம்பெண் சிறிமாவோவிற்கு நல்லாசி வேண்டி தினமும்

### 3 மாதங்களில்

பெற்றுள்ளார்கள்.

மார்ச் மாதத்தில் நாய்க்கடிக்குச் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 312 ஆக உயர்ந்துள்ளது இவர்களில் 60 பேர் விசர்நாய்க்கடிககுச் சிகிச்சை பெற்றார்கள்.

மக்களின் இடம் பெயர்வும் கடும் வரட்சியும், நாய்களைப் பிடிக்க போதிய வசதிகள் இல்லாமையும் கட்டாக்காலி நாய்கள் நடமாட்டத்திற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## மலையக இளைஞர்கள் இன்னும் விடுவிக்க வில்லை

(பதுளை)

ஊவாமாகாணத்தில் கடந்த பல மாதங்ளுக்கு முன் கைது செய்யப்பட்ட நாற்பத்தியேழு தமிழ் மலையக இளைஞர்கள் இதுவரை விடுதலை செய்யப்பட வில்லை என இ. தொ. கா. ஊவாமாகாண அரசியல் பிரிவு அமைப்பாளர் எம். எஸ் மூத்தையா தெரிவித்துள்ளார்.

புது வருடத்திற்கு முன்னதாக இவர்களை விடுதலை செய்வதாக பேச்சு வார்த்தையின் போது ஒத்துக் கொள்ளப் பட்டதாயினும் இவர்கள் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும்,

இவர்களில் பலர் மேலதிக விசாரணைக்கென கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

புது வருடத்தை முன்னிட்டு பிடிக்கப்பட்ட இளைஞர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையில் கொழும்பு வந்த இவ் இளைஞர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் பலத்த ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினர் என்றும் அவர் தெரிவித்தார்.

சேவா வனிதா இயக்கத்தின் தலைவியுமான ஹேமா பிரேமதாசா வடபகுதி இராணுவ முகாம்களுக்கு திடீர் விஜயம் செய்தபோது இந்த கயிறிழுப்பு போட்டியை ஒழுங்கு செய்தார். பிரிகேடியர் விஜய விமலரட்ணாவினால் தெரிவு செய்யப்பட்ட இராணுவத்தினரில் சிறந்த ஐவருக்கும், அங்கு பிரசன்னமாக இருந்த பத்துப் பெண்களுக்குமிடையே கயிறிழுப்பு போட்டி நடை பெற்றது அதில் பெண்கள் அணியினர் வெற்றிபெற்றனர்.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்ண, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல்கிளான்சிபெர்னான்டோ ஆகியோர் தமது மனைவியர் சகிதம் திருமதி ஹேமா பிரேமதாசாவுடன் திருக்கோண மலைக்கு விஜயம் செய்தனர். திருமதி ஹேமா பிரேமதாசா அங்கிருந்து வடபகுதி முகாம்களுக்கும் விஜயம் செய்தார்.

## ஆயிரக் கணக்கான ஏக்கர் காட்டுத்தீயால் நாசம்

கடந்தசில மாதங்களில் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட காடுகள் காட்டுத் தீ பரவியதால் அழிந்து விட்டதாகதெரிவிக்கப் படுகிறது.

சுமார் பத்து ஏக்கர் காடு முற்றாக எரிந்து சாம்பராகி விட்டதாகவும்,

கிக்கரிகன்ன, பட்டிபோல, போபத்தலாவ, சீதா எலிய ஆகிய பகுதிக்காடுகளே மிக மோசமாக பாதிக்கப் பட்டுள்ளதாகவும்,

தற்போதைய வரட்சி நிலை தொடருமானால் வனங்களின் பசுமையை பாதிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பிக்குகளின்

னும் ஓரிரு தினங்களில் குழு யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக் குழுவினர் நேற்று முன்தினம் கொழும்பில் ரெலோவினருடன் பேச்சு நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

### வங்காலை

ளம் பகுதியில் விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் ஒரு ஊர்காவல் படையினர் பலியாகியதாகசிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### மூதூரில்

திருக்கோணமலை மாவட்ட கடற்கரைப் பிரதேசங்களில் சிங்கள முஸ்லிம் மீனவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதனால் தமிழர்கள் மீன் பிடிப்பது முற்றாக தடுக்கப் பட்டுள்ளது தமிழ் மீனவர்கள் சிங்கள முஸ்லிம்மீனவர் களால் தாக்கப்பட்டு வருகின்றனர்

இதனால் கரையோரங்களில் சிறியளவில் மீன்பிடித்து வந்த தமிழ் மக்கள் மீதும் சிறிலங்கா இராணுவம் தாக்குதல்களை நடாத்தியுள்ளது

### வவுனியாவில்

பாக்கி ஒன்று, அதற்குரிய ரவைக் கூடுகள் ஒன்று, ரவைகள் - 30 என்பன கைப்பற்றப் பட்டன

புலிகளின் தாக்குதலால் சிறிலங்கா இராணுவம் பின் வாங்கிச் சென்றுவிட்டது.

நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் முளங்காவில், பூநகரி, நாகபடுவான், கரியாலை போன்ற பல்வேறு இடங்களிலும் இந்த நினைவஞ்சலிக் கூட்டங்களும் உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்பட்டது.

இவற்றை விட மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் அன்னை பூபதி நினைவாக அஞ்சலிக் கூட்டங்களும் அடையாள உண்ணாவிரத நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

### தீர்வுக்கான

இந்தச் சிவில் யுத்தத்தில் பாதிக்கப்படுவது தமிழ்பொது மக்கள் என்றார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசு தீர்வொன்றை முன்வைத்தால் நாம் அதனைப் பரிசீலனை செய்யத் தயார் என்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற் கொண்டிருந்த கத்தோலிக்க சமாதானக் குழுவிடம் விடுதலைப் புலிகள் தெரியப்படுத்தியிருந்தனர். அப்படியானால் அரசு சமாதானத் தீர்வுக்கு ஒரு திட்டத்தை முன்வைத்தால் அதனை விடுதலைப் புலிகள் ஆராயலாம்." அதற்கு நாமும் உதவி வழங்கத் தயாராகவுள்ளோம் என்று கூறினார்.

தூதுக் குழுவில் அங்கம் வகிக்கும் மற்றொரு பிக்குவான வண. மாதம்ப அஸ்ஸஜி மாநாயக்க தேரோ பி. பி ஸிக்கு வழங்கிய போட்டியில் புத்த பிக்குகள் இனவாதிகள் அல்ல என்பதை வலியுறுத்தினார்.

சர்வமதக் குழுக்கள் தம்மை வந்து சந்திக்கலாம் என்ற புலிகளின் அழைப்பை ஏற்றுத் தாம் யாழ்ப்பாண விஜயத்தை மேற்கொள்வதாகவும் —

தமிழ் தலைமைத்துவத்துவம் அதன் திட்டங்களை அரசுக்குவழங்குவதற்கான மனோதிடத்தை நாம் கொடுக்க வேண்டும் —

மேலும் 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் கைது செயயப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பார்வையிடவும் நாம் வடக்கு நோக்கி செல்கிறோம் என்றும் அவர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

டார்.

அனைத்து நிறுவனங்களினதும் கருத்துப்பரிமாற்றத்தின் பின்னர் தேச விடுதலைக்கான அறை கூவலை விடுக்கும் நாளாக மேநாளை ஒழுங்கமைப்பதற்கான செயற்பாட்டுக் கூட்டுக் குழு அமைக்கப் பட்டது. இக் கூட்டுக் குழு அனைத்து மக்களதும் கலந்து கொள்ளும் எழுச்சி நாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது

### நினைவஞ்சலி

துக் கல்லூரி மைதானத்தை நோக்கி சிறியரக குண்டு ஒன்றையும் விமானப் படையினர் வீசினர். இக்குண்டுமைதானத்தில்வீழ்ந்து வெடித்ததில்கமல நாயகி (வயது20) விக்னேஸ்வரன் (வயது 28)இராசையா (வயது 47) ஆகியோர் உட்பட எட்டுப்பேர்காயமடைந்தனர்.

எனினும் அஞ்சலிக் கூட்டம் அதேமைதானத்தில்தொடர்ந்தும் நடாத்தப் பட்டது. இக் கூட்டத்திலும் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டனர். இக் கூட்டத்தின் ஆரம்பத்தில் தியாகி அன்னை பூபதி நினைவாக "தமிழீழ ஈகைச் சுடர்" என்ற மலர் ஒன்றும் வெளியிடப்பட்டதுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பல முக்கிய பிரமுகர்களும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

போட்டி யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தில் இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமராட்சிப் பிரிவுக்கான மற்றுமொரு போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இப் போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இன்று பிற்பகல் 3. 30 மணிக்கு நடைபெறவுள்ளது.

### ஹில்மன்

எந்த நேரத்திலும் வெடித்துச் சிதறலாம்."

இவ்வாறு "கொழும்பு வாசிகளுக்கு ஓர் எச்சரிக்கை" என்ற தலைப்பில் கொழும்புப் பத்திரிகையான தினகரன் செய்தி வெளியிட்டுள்ளது.

ஹில்மன் மின்ஸ் மூன்று சிறிவாகனங்கள் மூன்றும்- வெள்ளை நிற டோயோட்டா கோஸ்டர் பஸ் ஒன்றும் இவ்வாறு குண்டு பொருத்தப்பட்டு வீதிகளில் ஓடவிடப்பட்டுள்ளதாகவும்,

இவற்றின் பெற்றோல் தாங்கிகளை இரண்டாகப் பிரித்து குண்டுகள் பொருத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளது.


க.பொ.த சாதாரணதரம்

பகல்முழுநேரவகுப்பு

யூனிவேர்சல்

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.


### 1-ம் ஆண்டு கண்ணீர் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 | 20 |
| 12 | 4 |
| 1928 | 1991 |

**அமரர் திருமதி**
**பூரணம் பஞ்சாட்சரம்**

(முன்னாள் கனிஷ்ட அதிபர் யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்)

எங்கள் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்
அந்த நினைவினிலே உங்கள் முகம் நிறைந்திருக்கும்
உங்கள் ஆன்ம சாந்திக்குஅனைவரும்பிரார்த்திக்கின்றோம்

'ஜெகன் பவன்'
மீசாலை தெற்கு
மீசாலை

கணவன்
மக்கள்
மருமக்கள்

(சி/2456)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.